# சீடர்த்துவம்: அழைத்தல், தேர்வு செய்தல், அனுப்புதல்

## ஆகஸ்டு 2014 அதிசா சிந்தனை மடல்

## <u>ஆண்டவரை மகிமைப்படுத்த தேர்வு செய்யப்படுதல்</u>

**நோக்கம்:** சீடர் என்பவர் ஆண்டவரின் மகிமையை வார்த்தைகள் மற்றும் செயலின் வழியாக வெளிப்படுத்த அழைக்கப்பட்டவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் ஆவார்.




### ஆரம்ப பாடல்: (அல்லது மற்ற பொருத்தமான பாடல்)

தேவனுக்கே மகிமை
தெய்வத்திற்கே மகிமை
தேடி வந்து மீட்டவரே
தினம் உமக்கே மகிமை - ஐயா
வாழ்க வாழ்க உம் நாமம் வாழ்க
*Thevanukkae Magimai*
*Theivathirkkae Magimai*
*Thedi Vanthu Meethavarae*
*Thinam Umakkae Magimai – Ayya*
*Vaalga Vaalga Um Naamam Vaalga*

உன்னதத்தில் தேவனுக்கே மகிமை உண்டாகட்டும் - இந்தப்
பூமியிலே சமாதானமும் பிரியமும் உண்டாகட்டும் - ஐயா
*Unnathathil Thevanukka Magimai Undaagattum – Intha*
*Boomiyilae Samathanamum Piriyamum Undaagattum* - *Ayya*

எளிமையான எங்களையே என்றும் நினைப்பவரே - எங்கள்
ஒளிமயமே துணையாளரே உள்ளத்தின் ஆறுதலே - ஐயா
*Yelimaiyaana Enggalaiyae Endrum Ninaippavarae –Enggal*
*Olimayamae Thoonaiyaalarae Ullathin Aaruthalae* - *Ayya*

**ஆரம்ப ஜெபம்:** *(மெழுகுவர்த்தி எரிவது போல், இயேசு நம் மத்தியில் வாசம் செய்ய நம்மில் ஒருவர் ஆரம்ப ஜெபத்தை செய்வோம்)*

# *1. வாழ்வை நோக்குதல்*

***முன்னுரை:***

இறைவன் நம் வழியாய் வெளிப்படவே நம்மை அழைத்தும் தேர்வு செய்தும் இருக்கிறார். இறைவனின் இந்த முயற்சி ஒரு கொடை மட்டுமல்ல மாறாக இது அவரின் அன்பின் செயலாகும். இறைவனின் உறவுக்குள் நுழையும் ஒவ்வொரு சீடருக்கும் அவருடைய விசுவாச வாழ்க்கையின் வழியாக ஆண்டவரை மகிமைப்படுத்த ஒரு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. திருமுழுக்கு யோவானும் இயேசுவை சுட்டிக்காட்டினார். மரியாளும் தன் சிந்தனை, சொல், செயல் வழியாக விசுவாசத்தையும் ஆண்டவருடைய மகிமையையும் வெளிப்படுத்தியதற்கு சிறந்த உதாரணம். மரியாள் இயேசுவின் சிறந்த சீடராகவும் தன் மகனின் மேல் அளவில்லாத அன்பு வைத்த தாயாராகவும் மட்டுமின்றி எளிமையும் கீழ்படிதலுக்கான பண்புகள் நிறைந்த ஆண்டவரின் அடிமையாவார். இயேசுவின் பிறப்பை அறிவித்த தருணத்தில் ‘‘ஆம்’’ என்று பதிலளித்ததின் வழியாக அவர் தன்னை முழு மனதுடன் தாயாராகவும் சீடராகவும் அர்ப்பணித்தார். நாம் அழைக்கப்பட்டு தேர்வு செய்யப்பட்ட சீடர் என்ற முறையில் நம்முடைய உலகத்தில் இறைவனை மகிமைப்படுத்த உரிமை பெற்றுள்ளோம். விசுவாச செயல்கள் வழியாக சீடர்கள் இன்னொரு கிறிஸ்துவாக மாறுகிறார்கள். ஒருவர் மற்றவருடன் பரிவு மற்றும் இரக்கத்துடன் இருப்பதே மரிளாள் போல ஆண்டவரை மகிமைப்படுத்துதல் ஆகும். ‘‘3ம் மில்லினியத்தின் நுழைவாயிலில் கிறிஸ்துவுக்கு திருச்சபைகள் கொடுக்கவேண்டிய உயரிய மரியாதை என்னவெனில் இரட்சகரின் முழு வல்லமையான பிரசன்னத்தை, விசுவாச கனிகள், நம்பிக்கை மற்றும் தர்மக் காரியங்கள் வழியாக வெளிப்படுத்துவதே ஆகும்.’’ (தெர்தியோ மில்லேனியோ எட்வெனியென்தே 37).

1. விவிலியத்தில் இறைவனால் தேர்வு செய்யப்படுவதையும் அனுப்பப்படுவதையும் குறித்து பகிர்வு செய்யவும்.

2. அழைக்கப்பட்டடோர் அநேகர், தேர்ந்தெடுக்கப்பட்டோர் சிலரே. அழைக்கப்படுதல் மற்றும் தேர்வு செய்யப்படுதல் இடையே உள்ள வித்தியாசம் என்னவென்றால் தேர்வு செய்யப்பட்டோர் பதில் அளிக்க தேர்வானவர். பகிர்வு செய்யவும்.

***சிந்தனை:***
*2. இறைவனுக்குச் செவிமடுத்தல்*



***<u>விவிலியம் :</u>***

அதைக் கேட்ட மரியா பின்வருமாறு கூறினார்; "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர். ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர். அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார்; உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்; தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார்; செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார். மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவி;ல் கொண்டுள்ளார்; தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார் ". - *லூக்கா 1: 46-55*



- *வார்த்தையை அல்லது குறுகிய வசனத்தை தேர்ந்தெடுக்கவும். 3 முறை சத்தமாக ஜெப சிந்தனையுடன் ஒன்று மற்றொன்றுக்கு இடையில் நிறுத்தி வாசிக்கவும்.*
- *நாம் தேர்ந்தெடுத்த வார்த்தையை கேட்பதற்கு 2 நிமிடம் அமைதி காப்போம்.*
- *நமக்கு தொட்ட வார்த்தையை பகிர்வு செய்வோம்.*

## 3. அன்பில் வாழ்தல்

விசுவாசத்துடன் அழைப்பில் வாழுதல்

ஆண்டவர் நம்மை அழைத்து அவருடைய திருப்பணிக்காக நம்மை பிரித்தெடுத்திருக்கிறார். நம் குடும்பங்களிலும், அதிசா-விலும், பங்கிலும், நம் சமுதாயத்திலும் இந்த அழைப்பை அறிந்துக்கொண்டு எவ்வாறு விசுவாச அறிக்கையிடுகின்றோம். இம்மாதம் நாம் நம் அதிசா குழுவுடன் சேர்ந்து தனிமையாக இருப்போர் அல்லது நோயினால் வாடுகிறவர்களை சென்று சந்திக்கலாம்.

## இறுதி ஜெபம்:

பரலோகத்தில் இருக்கின்ற பிதாவே, நன்மையின் காரணரே,
உமக்கு பணிப்புரிந்திட உண்மையாய் இருக்கசெய்திடும்.
நான் விசுவாசத்துடனும் அன்புடனும் உமக்கு பணிப்புரிந்து
முடிவில்லா வாழ்வில் பங்குக்கொள்ள கிறிஸ்துவின் உண்மையிலும்
என் இதயம் அவருடைய அன்பிலும் நிறைந்திட உதவியருளும்.
நற்கருணை திருவருட்சாதத்தின் வழியாக உம்முடைய வாழ்வை
பகிர்ந்துக் கொடுத்து எம்மை மகிழ்ச்சியாக்கினீர். ஊம்முடைய
பிரசன்னத்தில் என்னை நிலைத்திருக்க செய்யும். நான் உம்மை
விட்டு பிரியாமல்
என்றென்றும் உம்முடைய சித்தம் செய்ய உதவியருளும்.

## இறுதி பாடல்:



*மாசற்ற கன்னியே, மாமரியே மங்கள வார்த்தை கேட்டவளே*
*கடைக்கண் பார்த்திடுவாய கரம் நீட்டி காத்திடுவாய் -2*
Maasattra Kanniyea, Maamariyae Manggala Vaarthai Keatthavalea
Kadaikkan Paarthiduvaai  Karamneeddhi Kaathiduvaai - 2
*வாழ்க வாழ்க மரியே நீ வாழ்க -2*
Vaalga Vaalga Mariyea Nee Vaalga - 2

*உன்னதர் மகனாம் இயேசுவையே உதிரத்திலே சுமந்தவளே -2*
*இதயத்தில் எழுந்திடுவாய் என்னுடன் இணைந்திடுவாய் -2*
Unnathar Maganaai Yesuvaiyae Uthirathilae Sumanthavalae - 2
Ithayathil Elunthiduvaai Ennudan Inainthiduvaai - 2
*வாழ்க வாழ்க மரியே நீ வாழ்க -2*
Vaalga Vaalga Mariyea Nee Vaalga - 2